# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2339/09 - 2023 ජූලි මස 04 වැනි අඟහරුවාදා - 2023.07.04

*2339/09 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 04 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.வீ. 8/2007* (III)

**2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டம்**

*2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டத்தின் 36 மற்றும் 38 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 67 ஆம் பிரிவின் கீழ் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள்.*

**காஞ்சன விஜேசேகர,**
மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்.

கொழும்பு,
*2023, யூன் 28.*

**ஒழுங்குவிதிகள்**

*1.* இவ்வொழுங்குவிதிகள் 2023 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க குறித்த வலு நுகர்வு மட்டக்குறிகள் பற்றிய ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2.* இதற்கான அட்டவணை I இன் பாகம் I இல் குறித்துரைக்கப்பட்டதான சர்வதேச நியம கைத்தொழில் வகைப்படுத்தலுக்கு (ISIC) இணங்க வகைப்படுத்தப்படும் சேவை வசதிகளுக்கு குறித்த வலு நுகர்வு மட்டக்குறிகள் (இதனகத்துப் பின்னர் 'SEC' நியமங்கள் என


1A - PG 6486 — 406 (2023/07)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

குறிப்பீடு செய்யப்படும்) நிலைநாட்டும் நோக்கத்திற்காக இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையினது (இதனகத்துப் பின்னர் "அதிகார சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முகாமைத்துவ சபை (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயல்படுதல் வேண்டும்.

*3. (1)* சபை அத்தகைய சேவை வசதிகளை –

(அ) கிவொம/மீ² நிபந்தனைகளுக்குட்பட்டுள்ள இடத்தில் அல்லது வேறு ஏதாவது வெளியீட்டு மட்டுப்பாட்டிற்கான கிவொம இடவசதியில் ஒரு பஞ்சாங்க ஆண்டு காலப்பகுதியின் போது மின்சாரத்தை நுகர்ந்து இயங்குகின்ற ஏதேனும் ஒரு சேவை வசதியில் பயன்படுத்தக்கூடிய மின்சார மற்றும் ஏனைய அமைப்புகளில் இதற்கான அட்டவணை I இன் III ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள SEC மட்டக்குறிகளுடன் இணங்கியொழுகுவதற்கும் மற்றும்

(ஆ) இதற்கான அட்டவணை I இன் IV ஆம் பாகத்தில் தேவைப்படுத்தப்பட்டுள்ளவாறு இயைபான சேவை வசதிகள் தொடர்பில் பொதுவான தகவல்களுடன் அதிகார சபைக்கு வழங்குமாறும் தேவைப்படுத்துதல் வேண்டும்.

*(2)* சபை ஒரு சேவை வசதியை இயங்குவதற்கு பொறுப்பாகவுள்ள வசதி முகாமையாளர் எனக் குறிப்பிடப்படும் எவரேனும் ஆள் ஒருவரை ஏதேனும் பஞ்சாங்க ஆண்டின் ஒவ்வொரு காலாண்டும் முடிந்த பின்னர் பதினான்கு *(14)* நாட்கள் கழிவதற்கு முன்னர் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்டதான அத்தகைய படிவத்தில் சட்டத்தின் 36(2)(ஆ) எனும் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் விரிவான ஒரு சக்தி நுகர்வு அறிக்கையை அதிகார சபைக்குச் சமர்ப்பிக்குமாறு பணிக்கலாம்.

*(3)* சபை, ஒரு சேவை வசதியின் வசதி முகாமையாளரின் அங்கீகாரத்தின் பேரில் இதற்கான ஒழுங்குவிதி *3(2)* இன்கீழ் குறித்துரைக்கப்பட்டதான சக்தி நுகர்வு தகவல்கள் பற்றி அறிக்கையிடுவதற்கு சபையினால் விதித்துரைக்கப்பட்டவாறு வலு முகாமையான ஒருவராக வசதியின் ஊழியரொருவரை நியமித்தல் வேண்டும்.

*(4)* சபையானது ஒழுங்கவிதி *3(3)* இல் குறித்துரைக்கப்பட்டவாறு சேவை வசதியின் பொருத்தமான தகுதி வாய்ந்த ஓர் ஊழியரை ஒரு சக்தி முகாமையாளராக நியமிப்பதற்கு இயலாதுள்ள சந்தர்ப்பத்தில், சேவை வசதி முகாமையாளர், சக்தி முகாமையாளரினது பணிகளைப் புரிவதற்கு சட்டத்தின் *38* ஆம் பிரிவின் கீழ் சபையினால் உரிய முறையில் தராதர அங்கீகாரம் பெற்ற சேவை வசதியின் ஓர் ஊழியர் அல்லாத ஒரு சக்தி முகாமையாளரின் சேவைகளைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

*(5)* இவ்வொழுங்குவிதிகளின் ஒழுங்குவிதி *3(1)(ஆ)* மற்றும் *3(2)* என்பவற்றின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குவதற்கு எவரேனும் சேவை வசதி முகாமையாளர் தவறுகின்ற பட்சத்தில் சபையினால் முறையாக தராதர அங்கீகாரம் பெற்ற எவரேனும் சக்தி முகாமையாளர் அல்லது எவரேனும் சக்தி சேவை வழங்குநர் அவசியமெனக் கருதப்படுமிடத்து, சட்டத்தின் பிரிவு *36(2)* (அ) எனும் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ், சேவை வசதியுடன் இணங்கியொழுகுகின்றதான இதற்கான அட்டவணை I இன் பாகம் III இல் குறித்துரைக்கப்பட்ட மட்டக்குறியை உறுதிப்படுத்துகின்ற நோக்கத்துக்காக சேவை வசதி முகாமையாளரின் சம்மதத்துடன் ஏதேனும் சேவை வசதி இல்லத்தில், வளாகத்தில் அல்லது சேவை வசதியில் பரிசோதனையிடலாம், தகவல்களைச் சேகரிக்கலாம், எவையேனும் தகவல்களை உறுதிப்படுத்தலாம் அல்லது வேறு ஏதேனும் விசாரணையை நடாத்தலாம்.

*(6)* அட்டவணை I இன் III ஆம் பாகத்தில் தரப்பட்டுள்ளதான சேவை வசதியின் இயைபான வகுதியின் SEC மட்டக்குறிகளுக்கு மேலாக ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு மட்டத்தில் ஒரு வசதியின் ஒரு சக்தி வலு நுகர்வை அறிக்கையிடும் பட்சத்தில் சபை சட்டத்தின் *37* ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு அளவுக்கு மின்சார பாவனையைக் குறைப்பதற்கு ஒரு விரிவான வலு பற்றிய கணக்காய்வு அறிக்கையையும் EEI-C மற்றும் பற்றிய ஒரு செயல் திட்டத்தையும் சமர்ப்பிக்குமாறு வசதி முகாமையாளரைக் கோருதல் வேண்டும்.

*(7)* வசதி முகாமையாளர் சக்திக் கணக்காய்வை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக நிலவுகின்ற சக்தி நுகர்வு அறிக்கையையும் (PEC) மற்றும் பரிகார வழிமுறைகள் பற்றிய செயல் திட்டத்தையும் தயாரிப்பதற்கு விடயத்துக்கேற்ப சபையினால் முறையாக தராதர அங்கீகாரம் பெற்ற ஒரு சக்தி கணக்காய்வாளரின் அல்லது ஒரு சக்தி சேவை வழங்குநரின் சேவையைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

*(8)* இவ்வொழுங்குவிதிகளின் *3(4)*, *3(5)* மற்றும் *3(7)* ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் சக்தி முகாமையாளர், சக்தி கணக்காய்வாளர் அல்லது சக்தி சேவை வழங்குநர், சட்டத்தின் *38(1)* ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்படும் ஒரு தராதர அங்கீகாரம் பெற்ற சான்றிதழையும், சபையினால் விதித்துரைக்கப்பட்டதான நியமிக்கப்படும் அத்தகைய தகைமைகளையும் கொண்டுள்ள ஆளொருவராக இருத்தல் வேண்டும்.

*(9)* குறித்த சக்தி நுகர்வு அறிக்கை (SEC) கிடைக்கப்பெற்றதன் மேல், அதிகார சபை, அட்டவணை III இல் தரப்பட்டுள்ள ஒரு சேவை வசதியின் சக்தி செயல்திறன் கணிப்பீட்டு அட்டவணைக்கு இணங்க, இயைபான, வசதி வகுதியின் சக்தி செயல்திறன் மட்டத்தினது அடிப்படையில், வசதிகளுக்கு தோதான ஏதாவது கணிப்பீடுகளை அளிக்கலாம்.

(10) அதிகார சபை, தரப்பட்ட வகுதியிலுள்ள பத்து சிறந்த செயல்திறன் வசதிகளின் ஒரு பட்டியலையும், இவ் ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுவதற்கு தவறுகின்றதான வசதிகளின் ஒரு பட்டியலையும் காலத்துக்குக்காலம் வெளியிடலாம்.

4. இவ்வொழுங்குவிதிகளில் -

"சட்டம்" என்பது, 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டம் எனப் பொருள்படும் ;

"அதிகார சபை" என்பது, 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்டுள்ள இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை எனப் பொருள்படும் ;

"குறித்த சக்தி நுகர்வு மட்டக்குறி" என்பது, சர்வதேச நியம கைத்தொழில் வகுதியில் (ISIC) நான்கு டிஜிட்டல் அளவினால் ஏற்பாடு செய்யப்பட்ட வகுதிகளின்கீழ் ஒப்பிட்டுப்பார்க்கப்படக் கூடியதாக கருதப்படக்கூடிய வெளிப்படுத்தும் ஒரே இயக்க நிலைகளையுடைய ஒரு தொகுதி சேவை வசதிகளினால் வெளிப்படுத்தப்படும் குறித்த சக்தி நுகர்வு (SEC) எனப் பொருள்படும் ;

"சபை" என்பது, சட்டத்தின் 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் அமைத்துருவாக்கப்பட்ட அதிகார சபையின் முகாமைத்துவ சபை எனப் பொருள்படும் ;

"வகுதி" என்பது, ISIC வகுதியில் நான்கு டிஜிட்டல் அளவினால் ஏற்பாடு செய்யப்பட்ட வகுதிகளின்கீழ் ஒப்பிட்டுப் பார்க்கப்படக்கூடியதாக கருதப்படக்கூடிய வெளிப்படுத்தும் ஒப்பிட்டுப் பார்க்குமளவுக்கு இயங்கு நிபந்தனைகளை வெளிப்படுத்தும் வசதிகள் தொகுதி எனப் பொருள்படும் ;

"நிபந்தனைக்குட்பட்டுள்ள இடவசதி" என்பது, வெளிக்களசார் சூழலுடன் ஒப்பிடும்போது மிதமான அனல் சக்தியின் வித்தியாசமான அளவுகளில் வழங்கப்பட்டு சூழப்பட்டிருக்கும் ஒரு கட்டிடத்தைப் பயன்படுத்துகின்ற வெளிக்கள சூழலிலிருந்து வேறாக்கப்பட்டிருக்கும் ஒரு வசதியின் மொத்த இடப்பிரதேசம் எனப் பொருள்படும் ;

"EEI மற்றும் C" என்பது, ஒரு சேவையை வசதியில் சக்தி சார்ந்த வினைத்திறனை மேம்படுத்துவதற்காகவும் சக்தியைச் சேமித்து பாதுகாப்பதற்காகவும் ஒரு உருவகம் மேற்கொள்ளும் பல செயற்பாடுகள் எனப் பொருள்படும் ;

"வசதி" என்பது, வியாபார/வர்த்தக செயற்பாடுகள் அல்லது வீட்டு அலகுகள் அடங்கலாக பயன்படுத்தப்படுகின்ற கட்டிடம்/கொத்தணி/கூட்டு ஆதனம் மூலம் ஒரு தனியான இடத்தில் அல்லது பல இடங்களில் இயக்கப்படுகின்ற ஒரு வியாபாரம் சேவை வழங்கும் அல்லது உற்பத்தி செய்யும் ஒரு பொறித் தொகுதி, உற்பத்தியாகும் உற்பத்தி எனப் பொருள்படும் ;

"வசதி முகாமையாளர்" என்பது, ஒரு சேவை வசதியின் முகாமைத்துவம் மற்றும் நிருவாகம் ஆகியவற்றுக்குப் பொறுப்புடைய ஒரு ஆள் எனப் பொருள்படும் ;

"சர்வதேச நியம கைத்தொழில் வகுதி (ISIC)" என்பது, ஐக்கிய நாடுகளின் பொருளாதார, சமூக அலுவல்கள் திணைக்களத்தின் புள்ளிவிபரப் பிரிவு மூலம் வெளியிடப்பட்டுள்ள பொருளாதார செயற்பாடுகளின் கிடைக்கக்கூடிய புதிய வகுதி எனப் பொருள்படும் ;

"நிலவும் சக்தி நுகர்வு (PEC) அறிக்கை" என்பது, உண்மையான சக்திப் பாவனை, செயற்பாட்டு அம்சங்கள், அதிகார சபையால் பணிக்கப்படும்போது அதிகார சபைக்கான ஒரு சக்தி கணக்காய்வாளரின் மூலமாக தொகுக்கப்படும் ஏனைய பிற தகவல்கள் என்பவற்றின் அடிப்படையில் மதிப்பிடப்படும் ஒரு TMY இல் (பிரத்தியேக வானிலை ஆண்டு) ஒரு சேவை வசதியின் அநேகமான வருடாந்த சக்தி பாவனை பற்றிய ஒரு அறிக்கை எனப் பொருள்படும் ;

"விசேட சக்தி நுகர்வு (SEC)" என்பது, ஒரு சேவை அல்லது பண்டத்தின் அலகை விநியோகிப்பதில் அல்லது வழங்குவதில் பயன்படுத்தும் சக்தியின் அளவு எனப் பொருள்படும் ;

"பிரத்தியேக வானிலை ஆண்டு (TMY)" என்பது, கிடைக்கக்கூடிய உண்மையான நீண்டகால காலநிலைத் தரவுத் தொகுதிகளிலிருந்து மிகவும் பிரத்தியேக மாதங்களினது தெரிவின் மூலமாக மணித்தியால ரீதியில் சேரிக்கப்படும் காலநிலைத் தரவுகளின் செயற்கையான ஒரு பிரத்தியேக தனி ஆண்டு எனப் பொருள்படும் ;

## அட்டவணை I

### பாகம் I

(ஒழுங்குவிதிகள் 2, 3(1), 3(5) மற்றும் 3(6))

| **வகுதி** | **பிரிவு 471 - விசேடமயமல்லாத களஞ்சியசாலைகளில் சில்லறை விற்பனை** |
|---|---|
| 4711 | உணவு, பானங்கள் அல்லது புகையிலை என்பன அதிகளவில் களஞ்சியப்படுத்தப்படுகின்ற விசேடமயமல்லாத களஞ்சியசாலைகளில் சில்லறை விற்பனை |
| 4719 | விசேடமயமல்லாத களஞ்சியசாலைகளில் ஏனைய சில்லறை விற்பனை |
| ஐக்கிய நாடுகளின் சர்வதேச நியம கைத்தொழில் வகைப்படுத்தல் (திருத்தல் 4) மோட்டார் வாகனங்களினதும் மற்றும் மோட்டார் சைக்கிள்களினதும் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வியாபாரம் பழுதுபார்த்தல் ஆகியன பற்றிய G பிரிவின் கீழ் வருகின்ற ISIC வாகனங்களும் மோட்டார் சைக்கிள்களும் தவிர்ந்த சில்லறை வியாபார 47 ஆம் பிரிவின் கீழ் வகைப்படுத்தப்பட்டவை | |
| **வகுதி** | **பிரிவு 641 - பண இடைநிலை** |
| 6411 | மத்திய வங்கி |
| 6419 | ஏனைய இடைநிலை |
| 6420 | ஹோல்டிங் கம்பெனிகளின் செயற்பாடுகள் |
| 6430 | நம்பிக்கை பொறுப்பு சபைகள், நிதியங்கள் மற்றும் அவை போன்ற நிதி நிறுவனங்கள் |
| **வகுதி** | **பிரிவு 649 - காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதிய செயற்பாடுகள் தவிர்ந்த ஏனைய நிதி சார்ந்த வசதி செயற்பாடுகள்** |
| 6491 | நிதி குத்துகை |
| 6492 | பிற கடன் வழங்கல் |
| 6499 | வேறு எங்கும் வகைப்படுத்தப்படாத காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதி சார்ந்த செயற்பாடுகள் தவிர்ந்த ஏனைய நிதி சார்ந்த வசதி செயற்பாடுகள் |
| ஐக்கிய நாடுகளின் சர்வதேச நியம கைத்தொழில் வகைப்படுத்தல் (திருத்தல் 4) நிதி மற்றும் காப்புறுதி சார் செயற்பாடுகள் பற்றிய k எனும் பிரிவின் கீழ் வருகின்ற ISIC காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதி தவிர்ந்த நிதி வசதி செயற்பாடுகள் பற்றிய 64 ஆம் பிரிவின் கீழ் வகைப்படுத்தப்பட்டவை | |

### பாகம் II

| **தகுதிவாய்ந்த பண்புகள்** | **விபரம்** |
|---|---|
| சேவைப் பகுதி | ஒரு கிளைகள் வலையமைப்புக்கு அல்லது நிறுவனத்தின் உரிமையாளர்களுக்குச் சொந்தமான தனித்தனியான கட்டிடங்களின் மொத்தப் பரப்பளவில் அல்லது எவரேனும் தனியாள் கட்டிடத்தில் 5,000 மீ$^2$ அளவுக்கு மேற்பட்ட மொத்த சேவைப் பகுதியுடைய சேவைகள் |
| இயங்கும் மணித்-தியாலங்கள் | நாளொன்றுக்கு திறந்திருக்கும் நேரம் 16 மணித்தியாலங்களுக்கு பகல் நேரத்தில் இயங்கும் நிறுவனங்கள், வழங்க வேண்டிய முன்மாதிரி வாரநாள் நியம இயங்கு மணித்தியால அட்டவணையொன்று |

### பாகம் III

| **விபரங்களும் தகவல்களும்** | **விபரம்** |
|---|---|
| மட்டுப்படுத் தப்பட்டுள்ள வாறான இயக்கச் செயற்பாடுகள் : | அறிக்கையிடும் காலாண்டின் போது வழங்க வேண்டிய எவரேனும் இயங்காத கட்டிடங்களின், நிலமாடிகளின் அல்லது பகுதிகளின் விபரங்கள் |

| **விபரங்களும் தகவல்களும்** | **விபரம்** |
|---|---|
| **அடையவேண்டிய நியமங்கள் :** | ***180 கிவொம/மீ²/ஆண்டு*** (180 kWh/m²/year) |
| அறிக்கையிடும் விதம் : | *காலாண்டு ரீதியாக ஏதாவதொரு கலண்டர் ஆண்டின் ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் 14 நாட்களுக்குள்* |

பாகம் IV

**பொதுவான தகவல்கள்**

| | |
|---|---|
| நிறுவனம் பற்றிய விபரங்கள் : | நிறுவனத்தின் பெயர் : |
| | வியாபார பதிவு இலக்கம் : |
| | பகுதி : G/K பிரிவு : 47/64 தொகுதி : 471/641/649 வகுதி : |
| | (பொருத்தமற்றதை கீறிவிடுக) |
| | பிரதான வியாபார தொழிற்பாடு (தயவுசெய்து விரிவாகக் குறிப்பிடுக) : |
| | முகவரி : |
| | தொலைபேசி இலக்கம் : |
| | மின்னஞ்சல் முகவரி : |
| | இணையத்தள முகவரி : |
| மின்சார கணக்கு விபரங்கள் : | கணக்கு இலக்கம் : |
| | இறுப்பனவு வகுதி : |
| | மின்சார சேவை வழங்கும் தரப்பின் தொடர்பு புள்ளி : |
| வசதி முகாமையாளர் தகவல் | வசதி முகாமையாளரின் பெயர் (கள்) : |
| | முகவரி : |
| | தொலைபேசி இலக்கம் : |
| கையொப்பம் | மின்னஞ்சல் முகவரி : |
| சக்தி முகாமையாளர் தகவல் | சக்தி முகாமையாளர் பெயர் : |
| | தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தன்மை : அலுவலகத்தில்/அலுவலகத்திற்கு வெளியால் நியமிக்கப்பட்டுள்ளமை |
| | பதிவு இலக்கம் : |
| | முகவரி : |
| | தொலைபேசி இலக்கம் : |
| கையொப்பம் | மின்னஞ்சல் முகவரி : |

**அட்டவணை II**

**விரிவான சக்தி நுகர்வு அறிக்கை**

(ஒழுங்குவிதி 3 (2) )

1. செயற்பாடு

| | திங்கள் | செய்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு | விடுமுறை நாட்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஆரம்ப நேரம்: | | | | | | | | |
| முடிவடையும் நேரம்: | | | | | | | | |

2. சக்தி முறைமைகள்

மின்சாரம் (பெயரளவு நுகர்வு)

கிறிட் — கிவொம/மாதம் (kWh/month)

ஒப்பந்தக் கேள்வி — kVA

சுய உற்பத்தி — கிவொம/மாதம் (kWh/month)

டீசல் மின்பிறப்பாக்கி — kW (கொள்ளளவு)

சூரிய சக்தி PV — kW (கொள்ளளவு)

திரவ எரிபொருட்கள் (பெயரளவு நுகர்வு)

டீசல் — 1/மாதம்

மண்ணெண்ணெய் — 1/மாதம்

ஏனைய பொருட்கள்

வாயு எரிபொருட்கள் (பெயரளவு நுகர்வு)

தி. நி. எரிவாயு — கிகி/மாதம் (kg/month)

உயிரியல் எரிவாயு — மீ³/மாதம் ($m^3$/month)

ஏனைய பொருட்கள்

திண்ம எரிபொருட்கள் (பெயரளவு நுகர்வு)

நிலக்கரி — கிகி/மாதம் (kg/month)

உயிரணுத்திணிவு சக்தி — கிகி/மாதம்

எரி விறகு — கிகி/மாதம் (kg/month)

மரத்தூள் — கிகி/மாதம் (kg/month)

உமி — கிகி/மாதம் (kg/month)

ஏனையவை

3. வசதி அமைப்பு

| கட்டிட அலகு அடையாளம் | மொத்தப் பரப்பளவு மீ² | சேவை பகுதி மீ² ($m^2$) | |
|---|---|---|---|
| | | A/C | A/C அல்லாத |
| | | | |
| | | | |

4. சக்தி பாவனை தரவு

மின்சாரம்

| அறிக்கையிடும் மின்சாரம் | க்றிட் மின்சாரம் | | சுயமாக உற்பத்தி செய்யத மின்சாரம் கிவொம | |
|---|---|---|---|---|
| | kVA | இவொம kWh | டீசல் | சூரிய சக்தி PV |
| சனவரி | | | | |
| பெப்புருவரி | | | | |
| மாச்சு | | | | |

திரவ எரிபொருட்கள் - நுகர்வு லீற்றர்கள் (1)

| அறிக்கையிடும் சாளரம் | மின்பிறப்பாக்க எரிபொருள் (டீசல்) | டீசல் | உலை எண்ணெய் | மண்ணெண்ணெய் | ஏனையவை |
|---|---|---|---|---|---|
| சனவரி | | | | | |
| பெப்புருவரி | | | | | |
| மாச்சு | | | | | |

வாயு எரிபொருட்கள் நுகர்வு கி. கி. (kgs)

| அறிக்கையிடும் சாளரம் | தி. நி. எரிவாயு | உயிரியல் எரிவாயு | நிலக்கரி | எரி விறகு | ஏனையவை |
|---|---|---|---|---|---|
| சனவரி | | | | | |
| பெப்புருவரி | | | | | |
| மாச்சு | | | | | |

5. உற்பத்தி தகவல்

| உற்பத்தி | உற்பத்தி/சேவை விபரம் | அளவீட்டு அலகு |
|---|---|---|
| உற்பத்தி 1 | | |
| உற்பத்தி 2 | | |
| உற்பத்தி 3 | | |
| | | |
| உற்பத்தி 1 | | |
| உற்பத்தி 2 | | |

6. உற்பத்தி தரவு

| அறிக்கையிடும் சாளரம் | உற்பத்தி பரிமாணம் | | | | |
|---|---|---|---|---|---|
| | உற்பத்தி 1 | உற்பத்தி 2 | உற்பத்தி 3 | சேவை 1 | சேவை 2 |
| சனவரி | | | | | |
| பெப்புருவரி | | | | | |
| மாச்சு | | | | | |

7. விசேட சக்தி நுகர்வு (SEC) [ ]

**அட்டவணை III**

**வசதிகளின் சக்தி செயல்திறன் கணிப்பீடு (ஒழுங்குவிதி 3 (9))**

| நிரல் I | நிரல் II | | | | | |
|---|---|---|---|---|---|---|
| விஷேட சக்தி நுகர்வு (SEC)<br>ஆண்டொன்றுக்கு கிவொம/மீ2 | காணிப்பீடு | | | | | |
| SEC ≤ 90 | ஐந்து நட்சத்திரங்கள் | ★ | ★ | ★ | ★ | ★ |
| 90 < SEC ≤ 120 | ஐந்து நட்சத்திரங்கள் | ★ | ★ | ★ | ★ | |
| 120 < SEC ≤ 140 | ஐந்து நட்சத்திரங்கள் | ★ | ★ | ★ | | |
| 140 < SEC ≤ 160 | ஐந்து நட்சத்திரங்கள் | ★ | ★ | | | |
| 160 < SEC ≤ 180 | ஐந்து நட்சத்திரங்கள் | ★ | | | | |
| SEC > 180 | அனுசரிக்கப்படாமை | | | | | |

